செ.வெ.எண்: 741 நாள்: 15.11.2007

<u>பத்திரிகை செய்தி</u>

அமெரிக்காவின் பல்வேறு மாகாண பேரவைத் தலைவர்கள், பேரவைத் துணைத் தலைவர்கள் மற்றும் ஆட்சிப் பேரவை உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்று இந்திய அரசியலமைப்பு முறைகள் மற்றும் மத்திய மாநில அரசுகளின் உறவுகள் குறித்து அறிந்து கொள்வதற்காக இந்தியாவிற்கு வருகைபுரிந்துள்ளது.

சென்னைக்கு வருகைபுரிந்துள்ள அக்குழுவினர் இன்று (15.11.2007) நண்பகல் 12.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு.இரா.ஆவுடையப்பன் அவர்களை சந்தித்து தமிழக அரசியல் அமைப்பு மற்றும் தமிழக அரசின் செயல்பாடுகள் மற்றும் சாதனைகள் குறித்து தெரிந்து கொண்டனர்.

அவ்வமயம் சட்டமன்ற பேரவைச் செயலாளர் திரு.மா.செல்வராஜ் அவர்களும் உடனிருந்தார்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.